2011 பிப்ரவரி 5]

தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042–தை 22

2011 பிப்ரவரி 5, சனிக்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்றம்–தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கு நெறி."

வருவாய் அளவை அறிந்து, அதனை வகுத்து வழங்குவதே பொருளைச் சிராகக் காத்து வாழும் வழியாகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 1. (குறுக்கீடுகள்)

2. முக்கிய பிரச்சினையை வினாக்கள்–விடைகள் நேரத்திற்கு முன் எழுப்ப முற்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்திற்கு முன்பு எதுவும் எடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) அது உங்களுக்குத் தெரியும், எனக்கும் தெரியும். அதைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) வினாக்கள்–விடைகள், வினா வரிசை எண் 1. (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்திற்கு முன்னால் வேறு எதுவும் எடுக்கக் கூடாது என்று categorical–ஆக, clear–ஆக விதிகளில்